உ

சிவமயம்.

# தில்லை நடராஜர்பேரில்

## பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது


மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என், சி.

1914.


தில்லை நடராஜர்.

கடவுள் துணை.

# சாற்றுக்கவி.

கரூரில்வசிக்கும் தமிழ் உபாத்தியாயராகிய

## குப்பமுத்துபிள்ளையவர்கள் இயற்றியது.

### விருத்தம்.

முகில்பரவுங்கருவைதனிற் குறளுரைத்தோன்மற
பினர்கண் முழுது மோங்க, புகழ்பெருகும் வயிரமுத்து
தனையனெனும் பாலமுத்து புலவனுரைத்தேன், குகன்மகிழ
குருமுனியுங் கூத்தாடச் சேடனுமே குதிகொண்டாட,
ஜெகமகிழத் தில்லைவளர் நடராஜன் மேல்பதிகம் செப்
பினேனே.

கரூரில்வசிக்கும் வைத்தியம்,

## முத்துகருப்ப பண்டாரமவர்களியற்றியது.

### நேரிசை-கலித்துறை.

ஞானமுனிவற்பரவு நடேசரடியிணையிற்
பானுமதியுந்திகளும் கருவையிற்பாலமுத்து
தேனுங்கனியும் கற்கண்டுநற்சீனியுந் தெள்ளமுதாய்
மோனமுணரும் பதிகமதாக மொழிந்தனனே.

சிவமயம்.

# தில்லை நடராஜர்பேரில்

## பதிகம்.

காப்பு - நேரிசைவெண்பா.

சீர்கமலத்தேன்பொழியும் தில்லைநடராஜர்தம்மேற்
சீரார்புகழும் செந்தமிழைப் பாடுதற்கு-தார்புனையும்
ஷண்முகர்க்குமுன்னாகத் தந்திமுகத்தெந்தைபதம்
வண்மைபெறவாழ்த்துகவென் வாய்.

அறுசீர்க்கழிநெடில் - ஆசிரியவிருத்தம்.

இராகம்-தோடி.

பூர்ணமிகுங்கிரண பருதியெனவொளிபெறவுபொன்மகுட முடியினழகும், புகலறிய யிருசெவியில் நவமணிக்குழைகளும் பொறுகண்டசரத்தினழகும், காரணமதாகவரு சிருஷ்டியைக்கார்க்குமுன் கருணைகடைவிழியினழகும், கஸ்தூரிதிலகமும் வெண்ணீறுமுன்னிய கமலவதனத்தினழகும், வாரணமதுரியாடை திருமேனிப்போர்வையும் வச்சிரமணி பாதகுறடும், வரிசைபெற

பௌனிவர கொலுசிலம்பதிரவெகு வடிவுள்ள நடையி னழகும், ஆறண முதற்பொருளதாய் நின்றவுன்பெரு மை யடியனுல்பகரவெளிதோ, அன்பருளவாசனே உம் பர்பணி ஈசனே ஆனந்தநடராஜனே. (க)

விண்டலத்தோர்கூட வேதகீதம்பாடவிரித்தசெஞ் சடையுமாட, விடையாட யிடையாட கையிற்கண்கண மாட விரிசூலகரமுமாட, கண்டமதில்ருத்திராக்ஷத்தாழ் வடமுமாடவும் கங்கையணி வேணியாட, கந்தமிகுமல் லிகை மலராரம்விரிமார்பில் கனகமணிஊசலாட,வெண் டறள மணியாட வேதவேதியர் நாட விரலறியுமயனு மாட, மேனகை அரம்பையொடு ஊர்வசிதிலோர்த்தமை வெண்சாமரங்களாட, அண்டர்தொழ நின்றுடு முண்ட கப்பாதனே அடியனேற் கருளவருவாய் அன்பருளவா சனே உம்பர்பணி ஈசனே ஆனந்தநடராஜனே. (உ)

சிவசிவாவென்றநின் திருநாமமந்திரம் சிந்தைதனி லென்று மறியேன், சிற்பராபரமான தற்பரா யோகசுக சிவநிஷ்டை யேதுமறியேன், தவமோங்கு பத்தரின் தரி சனங் கண்டிலேன் சற்சனர்க ளுறவு மறியேன், தலம தாய்மகிமையுறு சன்னதிதனிற் சென்று சரணங்கள்செ ய்துமறியேன், குவலயந் தன்னில்வளர் மர்னிடப்பிறவி

தனிற்கொடியவனுகிய னுயினேன், குலைகளவுகட்காமமி
வையெலாம் நிறைபெருகக் குடிகொண்ட வம்பனேனை
அவசியம் உனதுதிருக் கண்பார்த்துரக்ஷியும் அண்ணலே
யமுதவடிவே, அன்பருளவாசனே உம்பர்பணி ஈசனே
ஆனந்தநடராஜனே. (ரு)

தீதுநலமிதுவென்று சிந்தையுள்ளுணராத சீரிலா
நன்பருறவும், தீயோர்கள்தரிசனமும் அய்யமறமேலிட்
ட ஜெகமாய்கைமூழ்கியானும், கோதிலாவாகம புராண
நெறியறியாதகுருடனு யனேகவிதமாய், குற்றங்களைத்
தனே செய்திருந்தாலுமுன் குழந்தையென்றெண்ணும
லென் மீதுமனவர்மங்கள் வைத்திருந்தாலிந்த மேதினி
யிற்புகழதாமோ, வேண்டாமிவ் வேளைதனில் ஆண்ட
வாவேண்டினேன் இவ்வினையகலவேணுமையா, ஆதரவு
நின்னைவிட திக்கெனக் ககிலமதி லாருளா ரமலநாதா,
அன்பருளவாசனே உம்பர்பணி ஈசனே ஆனந்த நட
ராஜனே. (சு)

மாயாவிகாரமது ஓயாமலோங்கிவளர்மானிலந் தன்
னிலடியேன், மாவினைகள்வேரூன்றும் பாவங்கள் வெ
குகோடி மதியாதுசெய்தனன்யான், பேயாய்த்திரிந்து
நின்றிருவடியைவிட்டுயிப் பேருலகிலாசை தொட்டுப்

பித்தனுயனேகவகைகுற்றங்கள் செய்துவரும்பிழையெலாமகற்றிடாமல், சேயனுனென்மீது வர்மம்சாதிக்கலால் சிறுவனுன்சகிக்கவசமோ, தேசமெல்லாம்புகழுமாசற்றரூபனே தேஜோமயானந்தனே, ஆயுமப்புகழ்தில்லையம்பலத்தரசனே அடிநடுவுமுடிவானவா, அன்பருளவாசனே உம்பர்பணி ஈசனே ஆனந்தநடராஜனே. (ரு)

சஞ்சலமிகுந்துறவு பாழ்படுக்குழியதாம் தையலர்கள்யோனியழறில், தள்ளுண்டுளன்றுமே தயங்கிமிகவாடிடும்தமியனேனுதலாலென், வஞ்சமுறுமனதிருளைமாற்றவனுபானுவென மாமகிமையுற்றவெனது, மணிமந்திரவாளினல் வசையள்வறுத்தெனது வல்வினையைநீக்கியருள்வாய், கஞ்சமலரடிதனை யெண்ணுலுமர்ச்சிக்கக் கருணைதரமிதுதருணமே, காலாகாலாகண்டா நீலகண்டாசிவ கங்காதரக்கடவுளே, அஞ்சலென்றுன்பதம்நம்பினேனெப்பொழுதும் அடியேனையாளவருவாய், அன்பருளவாசனே உம்பர்பணிஈசனே ஆனந்தநடராஜனே.

பெருகுந்தியெழுகுமிழியெனவருகுசெல்வமும்பெருமைபெரு மகமுமிக்க, பெற்றதாய் தந்தையர்கள் பெண்டிருமக்களும், பேருறவு சுற்றங்களும், கருதரியநிறைகளும் யிதுவெலாங் கனவினிற் கண்டிடுங் காக்ஷிய

ன்றோ காயநிலையென்றிடவு மொண்ணுதரைக்கணம் கரு திடவுமெய்யல்லவே, மருவுமல்லிகைமுல்லை ஷெண்பகம் மலர்புனையும் மங்கைமகிழ்கின்றநேயா, மாராதபவபிணி யில் தீராத கவலையுறும் வாதினையை மாற்றியருள்வாய், அருகுடன் கொன்றையுந் தும்பைமல ரணிகின்ற அமலனேயென்னையாளும், அன்பருளவாசனே உம்பர்பணி ஈசனே ஆனந்தநடராஜனே. (எ)

பொங்குமகயானையா விடலுற்றவம்பரைப் புகழ் பெறப்பாதுகாத்தீர், பூவுலகிலுன்னன்பர் யெவர்களையு முன்னுளிற் பொருந்தவே காக்கவிலையோ, அங்கசன்க ணைதொட நுதல்விழிதிரந்தெறித் தவர்க்கருள் புரியவி லையா, அந்தமுப்புரமெறிய நகைசெய்வண்டமொடு ஆ ளிகளுமதிரவிலையா, பங்கப்பேர்கொள்ளாம லிங்கெனம் வந்தெனைப்பாலிப்பதென்னமலையா, பாராதிருப்பதுவும் பார்செய்தபோதினையோ பாலனுக்கதுசொல்லையா, ஐங் கரனு மறுமுகனும் செங்கனிக்காவலம் அருகில் வரும்ப ரமசிவனே, அன்பருளவாசனே உம்பர்பணி ஈசனே ஆ னந்தநடராஜனே. (அ)

தில்லைநடராஜர்பதிகம் முற்றிற்று.

---